ஈ போல இருக்கிறது. கொஞ்ச நாளில் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஆகவே இனிமேலாவது உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : உடனடியாக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. கவன ஈர்ப்பு.

(i) செஞ்சி வட்டத்தில் பழ ரசத்தில் போதை வஸ்துக்களைக் கலந்து விற்றதாகக் கூறி விவசாயிகளை தொல்லைப் படுத்தல்.

திரு ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 இன் கீழ், "செஞ்சி வட்டத்தில் பழரசக் கடைகள் கணக்கில்லாமல் லைசன்சு வழங்கியதால் விற்கக் கூடியவர்கள் பழரசத்தில் மது சம்பந்தமான போதை வஸ்துக்களைக் கலந்து விற்பதாகக் கூறி காவல் துறையினர் விவசாயப் பெருங்குடி மக்களை அடிக்கடி தொல்லை கொடுக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் ஏழை விவசாயிகளுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும், பொது முக்கிய முமான காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனித்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 4 (L) 2 உரிம வகைகளும், 3 (L 3) உரிம வகைகளும் செயலில் உள்ளன. L 2 உரிமங்கள் என்பது சாராயம், அபின், மயக்கம் தரும் பிற மருந்துகள் கொண்ட மருந்துத் தயாரிப்புகள், ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் குறித்து வழங்கப்படுபவையாகும். L 3 உரிமம் ஆயுர்வேத மருத்துவர்கள் மருந்து தயாரிக்கும் காரியத்திற்காக—வாணிப காரியத்திற்காக அல்ல—வழங்கப்படுவதாகும். 4. (L 2) உரிம வகைகளின் 2 உரிம வகைகள் ஆயுர்வேத மருந்து தயாரிப்புகளுக்காக வழங்கப்படுபவையாகும். ஒன்று அபின், கஞ்சா கலந்த ஆயுர்வேத மருந்து தயாரிப்பு குறித்ததாகும் மற்றொன்று ஹோமியோபதி மருந்து தயாரிப்பு குறித்ததாகும். செஞ்சி. வட்டத்தில் L 2 அல்லது L 3 உரிமம் எதுவும் செயலில் இல்லை. 1955-ம் ஆண்டு மருந்து, ஒப்பனைப் பொருள் தயாரிப்புகள் (ஆயத்தீர்வைகள்) சட்டத்தின் கீழும் 1956-ம் ஆண்டு விதிகளின் கீழும் இந்த உரிமங்கள் மாவட்ட வருவாய் அதிகாரியினால் வழங்கப்படுகின்றன. இந்த உரிமங்கள் இப்போது இரண்டாண்டுகளுக்கு மேலாகச் செயலில் இருந்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் 1,200 பேர் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு : 1965—41 ; 1966—60 ; 1967—69 ; 1968—6. செஞ்சி வட்டத்தில் தற்போது 9 ஹோமியோபதி மருத்துவர்கள் உள்ளனர். இந்த வட்டத்தில் அண்மை ஆண்டுகளில் ஹோமியோபதி மருத்துவர்களாகப் பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு: 1965—1 ; 1966—4 ; 1967—4.

இம் மாவட்டத்தில் மருந்து ஒப்பனைப் பொருள் வணிகர் எண் 30 பேருக்குச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மை ஆண்டுகளில் மேற்படி உரிமங்கள் வழங்கப்பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

1965—6 ; 1966—2 ; 1967—2 ; 1968—1. இந்த உரிமங்களில் ஒன்றுகூட செஞ்சி வட்டத்தைச் சேர்ந்தவர்களுக்காக வழங்கப்படவில்லை.

செஞ்சி காவல் துறை வட்டத்திலுள்ள 5 நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மது விலக்குக் குற்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	1965	1966	1967
செஞ்சி காவல் நிலையம் ..	117	175	169
வளத்தி காவல் நிலையம் ..	72	105	101
அவலூர்பேட்டை காவல் நிலையம்	166	214	164
கஞ்சனூர் காவல் நிலையம் ..	84	103	116
அனந்தபுரம் காவல் நிலையம்	88	99	81

இந்த மொத்த மதுவிலக்குக் குற்ற வழக்குகளில் செஞ்சி காவல் துறை வட்டத்தில் குடிமயக்கத்தில் இருந்ததாக 1965-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை தொடரப்பட்ட வழக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	1965 தலைப்பு 19	1966 தலைப்பு 19	1967 தலைப்பு 19
செஞ்சி காவல் நிலையம் ..	49	85	55
வளத்தி காவல் நிலையம் ..	33	59	65
அவலூர்பேட்டை காவல் நிலையம்	99	96	58
கஞ்சனூர் காவல் நிலையம் ..	43	49	34
அனந்தபுரம் காவல் நிலையம் ..	21	35	23
மொத்தம் ..	245	324	235

செஞ்சி காவல் துறை வட்டத்தில் 1967-ம் ஆண்டில் குடிமயக்க வழக்குகளின் எண்ணிக்கை 1965-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 10 குறைவாகவும், 1966-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 89 குறைவாகவும் இருக்கிறது. மதுவிலக்குக் குற்றங்களின் எண்ணிக்கையும் 1966-ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 1967-ம் ஆண்டில் குறைவாகவே உள்ளது.

எனவே, மதுவிலக்குக் குற்ற வழக்குகள் அதிகரிக்கவில்லை என்பது தெளிவு. இப்போதுள்ள மது உரிமங்கள் கடந்த இரண்டாண்டுக் காலமாகவே செயலில் இருந்து வருகின்றன. எனவே, பல்வேறு மருந்துப் பொருள்களைச் சாராயமும் மயக்கம் தரும் ஏனைய பொருளும் சேர்த்துத் தயாரிப்பதற்காக உரிமம் அளிப்பது அதிகரித்திருப்பதாகக் கூறுவதற்கில்லை.

எனவே, மதுவிலக்குக் குற்ற விவரங்களைப் பார்க்கும்போது அரிஷ்டங்களையும் ஆசவங்களையும் அருந்துகிற டாமக் குடியானவர்களுக்குக் காவலர் தொல்லை கொடுத்து வருவதாகக் கூறுவதற்கில்லை.

திண்டிவனம் எம். எல். ஏ. 24—4—1967-ல் மாநிலக் காவல் துறைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தை நான் இங்குக் குறிப்பிடலாம். செஞ்சி காவல் நிலைய வரம்புகளுக்குள் அமைந்துள்ள திருவட்டட்டு, ஜயங்கொண்டாம், ஜட்போதி குறிஞ்சிப்பட்டை முதலான கிராமங்களில் பனை மரம், தென்னை மரம் ஆகியவற்றிலிருந்து கள்ளத்தனமாகக் கள் இறக்கப்படுவது அதிகரித்துள்ளதாகவும், உள்ளூர் துறை நடவடிக்கை

எடுத்து இக் கள்ளப் பழக்கத்தை அறவே ஒழிப்பதில் அக்கறை காட்டவில்லை எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அதன்மேல் காவல் துறைக் கண்காணிப்பாளர் அப்பகுதியில் 2—5—1967 தேதியன்று திடீர் சோதனையிட்டார். இதன் காரணமாக 14 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள்மீது தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (a) (d) (e) (k) பிரிவுகளின் கீழ் 70/67 முதல் 85/67 வரையுள்ள எண்களில் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. முன்னர் நடவடிக்கை எடுக்கத் தவறிய காவல்துறை அதிகாரிகள் இந்தத் திடீர் சோதனைக்குப் பிறகு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பணியில் நாட்டமின்றி இருந்ததற்காக அவர்கள்மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டது. எம். எல். ஏ. கடிதத்தின்மீது எடுத்த நடவடிக்கைகளின் பலனாக, இப் பகுதியில் மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இது தவிர, செஞ்சிப் பகுதியில் ஏதுமறியாத பாமரக் குடியானவர்களுக்குக் காவலர் தொல்லை கொடுத்து வருவதாகவும், அரிஷ்டங்களையும், ஆசவங்களையும் விற்பனை செய்யும் கடைகளுக்கு அதிக எண்ணிக்கையில் உரிமங்கள் கொடுத்ததன் பலனாகவே இது ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படும் கூற்றிற்கு ஆதாரமே இல்லை.

(ii) இராமநாதபுரம் நகராட்சி குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படாமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் அவசரமும் பொது முக்கியமுமான காரியமொன்றை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு திரு. டி. தங்கப்பன் அவர்கள் கொண்டு வருகிறார்கள்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 41-வது விதியின் கீழ் கீழ்க்கண்ட பொதுமுக்கியமும் அவசரமும் வாய்ந்த காரியத்தைப்பற்றிய விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இராமநாதபுரம் நகராட்சி குடிதண்ணீர் திட்டம் சோதனைகள் முடிவு பெற்று நீண்ட நாட்களாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறதால் மிக அவசரமாகத் தேவைப்படுகின்ற நிலையில் அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்பற்றி அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகராட்சிக்கும் வழியிலுள்ள கீழ்க்கண்ட 8 ஊராட்சி மன்றங்களுக்கும் நீர்வழங்கு திட்டம் ஒன்றை நிறைவேற்ற 1966 நவம்பரில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நீர்வழங்கு திட்டத்தை நிறைவேற்ற ரூ. 37·41 இலட்சமும், அதைப் பேணிவர ஆண்டொன்றுக்கு ரூ. 27,500-ம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(1) பொட்டிசெட்டிக்குடி.
(2) கருத்தநேந்தல்.
(3) தேவேந்திர நல்லூர்.
(4) மாவிலங்கை.
(5) கீழ்க்கோட்டை.
(6) தியனூர்.
(7) எட்டிவயல்.
(8) அச்சுதன் வயல்.

1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி, இராமநாதபுரம் நகர மக்கள் தொகை 26,915. இராமநாதபுரம் நகராட்சியைப் பொறுத்த வரையில், நாளொன்றுக்கு ஒருவருக்கு 15 காலன் நீர் என்ற விதிப்படி